## இலங்கை தேயிலைச் சபை - 2018

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேயிலைச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79(பீ) பந்தியின் பிரகாரம் சபையினால் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ஆனால் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 48,119,068 தொகையான அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் | இலங்கை தேயிலைச் சபையின் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதற்காக தேவையான உதவிகளை வழங்குமாறு அரசாங்க மதிப்பீட்டாளருக்கு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் அனைத்து சொத்துக்களினதும் மீள்மதிப்பு | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79(பீ) பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் கணனி உபகரணங்கள் முதலிய சொத்துக்கள் மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) வெளிநாட்டு தேயிலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக மேம்படுத்துதல் மற்றும் பகிரங்கப்படுத்துதல் நிதியிலிருந்து தூதுவராலயஙகளுக்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 758,353 தொகை முற்பணமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலவாக கணக்கீடு செய்யப்படடிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து சரியாக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். | வெளிநாட்டு தேயிலை மேம்பாட்டு திட்டங்களை நடாத்துவதற்காக வழங்கப்படுகின்ற பணம் முற்பணங்களாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) சீனா தேயிலை மேம்பாட்டு பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்காக சீனா அரசாங்கத்தால் சபைக்கு மீளச் செலுத்தப்பட்ட ரூபா 889,870 (RMB 33,389.74) தொகையான பெறுமதி சேர் வரியானது (வெட்) கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீன அரசாங்கத்தின் மூலம் சீன தூதுவராலயத்திற்கு மீளச் செலுத்தப்பட்ட RMB 33,389.74 தொகையான பெறுமதி சேரி வரிப் பணம் இலங்கை தேயிலைச் சபைக்கு 2019 ஆம் ஆண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (வெட்) கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) ரஷ்யா தேயிலை மேம்பாட்டுப் பிரிவிற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 898,086 (RUB 12,910.77) தொகையான சுங்கக் கட்டணமும் பதிவு செய்தல் கட்டணமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரஷ்யா தேயிலை மேம்பாட்டுப் பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்காக சுங்க கட்டணம் மற்றும் பதிவு செய்தல் கட்டணத்திற்காக கொடுப்பனவு செய்தமை தொடர்பான கணக்கு செம்மையாக்கல்கள் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது செலவு செய்யப்பட்ட சுங்க கட்டணங்களும் பதிவு செய்தல் கட்டணங்களினதும் பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தூதுவராலயத்தில் காணப்பட்ட சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,411,855 பணம் கடன்பட்டோர்களின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நிதி நிலைமைக் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் ஆண்டின் இறுதியில் உள்ள காசும் காசுக்குச் சமமானவைகளுமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது சரியாக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். | தூதுவராலயத்தில் காணப்படுகின்ற சபைக்கு கிடைக்க வேண்டிய பணம் கடன்பட்டோரின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |
| (உ) | ரூபா 2,155,202 பெறுமதிக்கு வழங்கப்பட்ட நிருவாகக் கட்டிடத்திற்கு வர்ணம் பூசும் ஒப்பந்தத்தின் வேலை மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்படாதிருந்தும் அப்பெறுமதியானது கட்டிடங்களை திருத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய திருத்தம் செய்தல் சம்பந்தமாக 2018-12-07 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்குதல் இடம்பெற்றுள்ளதனால் அந்த ஆண்டிற்காக செலுத்த வேண்டிய நிதிஏற்பாடாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேலை ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தப் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) ஜப்பான் தூதுவராலயத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 189,839 | 1,944 | 187,895 | 2018 இல் கணக்கு தயாரிக்கும் திகதி வரை ஜப்பான் தூதுவராலயத்திலிருந்து 2018 ஆம் ஆண்டிற்காக 2018-06-30 இலிருந்து 2018-12-31 வரையான காலத்திற்குரிய வவுச்சர்கள் இலங்கை தேயிலை சபைக்கு கிடைத்திருக்காததனால் கணக்கீடு செய்வதற்கு முடியவில்லை. உரிய கணக்கு செம்மையாக்கல்கள் 2019 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றுள்ளது. | தூதுவராலயத்தின் செலவு விபரத்தை விரைவாகப் பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | ஐக்கிய அராபி எமிர் இராச்சியத்தின் மேம்பாட்டு அலுவலகத்தின் காசு மற்றும் வங்கி மீதி | 1,279,771 | 894,099 | 385,672 | வெளிநாட்டு விவகார அமைச்சின் பிரதான கணக்காளருடன் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டது. எனினும், இது தொடர்பாக விபரமான தகவல்கள் அவரிடம் இல்லை என குறிப்பிடப்பட்டதனால் எதிர்காலத்தில் இது சம்பந்தமாக சரியான நடைமுறைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளைத் குறித்துக் கொள்கின்றேன். | சபையின் தகவல்களைச் சமர்ப்பித்து சரியான மீதியை கணக்கீடு செய்ய வேண்டியதுடன் கொடுக்கல் வாங்கல்களை நாளதுவரையான வகையில் பேணுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பிரசித்தப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் நிதியத்தின் நானாவித கடன்பட்டோர் | 643,432 | மீதிகளை உறுதிப்படுத்தல் விபரமான துணைப் பதிவேடுகள் | உறுதிப்படுத்துதல், துணைப் பதிவேடு கிடைத்த பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | உறுதிப்படுத்தலை காலரீதியாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேம்படுத்துதல் மற்றும் பிரசித்தப்படுத்துதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரான்சு தூதுவராலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பணம் | 758,353 | செலவு விபரம் | தூதுவராலயத் திலிருந்து தகவல்களை பெற்றதன் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | செலவு விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | ஜயிக்கா செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அறிக்கை | 279,507 | செலவு செய்வதற்கான அதிகாரத்தை உறுதிப்படுத்தும் கடிதம் | செயற்திட்டத்திற்கான ஆவணங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | அதிகாரத்துடனான செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டில் பதப்படுத்தப்படாத தேயிலை கொழுந்திற்காக ரூபா 80 ஆகக் குறைந்த விலையைப் பேணுவதற்காக கொழுந்து வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யும் வகையில் ஒரு தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட ரூபா 3,489,773 பணம் கொழுந்து வழங்குனர்களுக்கு வழங்கப்படாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை அப்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அந்த தொழிற்சாலையிலிருந்து அறவீடு செய்வதற்கு தற்பொழுது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டரீதியான நடவடிக்கைகளை விரைவாக நிறைவேற்றி நிலைமையை சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) 2012 யூன் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் குறிப்புக்களின் பிரகாரம் தோட்ட மக்கள் அபிவிருத்திச் சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 25,000,000 தொகைக்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள ''சிலோன் டீ மீயூசியம்'' இன் உரிமையைப் பொறுப்பேற்றல் மற்றும் மீதியைப் பதிவழிப்பதற்கு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் தேயிலைச் சபையும் தீர்மானம் மேற்கொண்டிருந்த போதிலும், முகாமைத்துவம் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரை இந்நடைமுறையைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபையினால் ''சிலோன் டீ மியூசியம்'' அமைந்துள்ள காணியை ஒப்படைப்பதற்கு அப்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது அந்த இணக்கப்பாடு நீக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக அவர்களால் தேயிலைச் சபையுடன் முப்பது ஆண்டுகள் குத்தகை உடன்படிக்கை செய்து கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | இரண்டு தரப்பினர்களும் இணங்கி கடன் பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 ஆம் ஆண்டின் போது உலகளாவிய தேயிலை உபசரிப்பிற்காக வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 51,604,457 பணத்தில் சேமிக்கப்பட்ட ரூபா 1,884,779 பணம் 2019 ஏப்ரல் மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தை 2019 ஆம் ஆண்டின் போது முடியுமான அளவில் அறவீடு செய்வதற்கு குறித்துக் கொள்கின்றேன். | விசேட செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட பணத்தில் மிகுதிப் பணத்தை செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் உலர்த்தாத தேயிலைக் கொழுந்திற்காக ரூபா 80 ஆகக் குறைந்த விலையைப் பேணுவதற்காக கொழுந்து வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யும் வகையில் சபைக்கு பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 6,738,000,000 தொகையான நிவாரணப் பணத்திலிருந்து எஞ்சியுள்ள ரூபா 1,523,148 பணம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியிலிருந்து திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாது மீளாய்வாண்டின் இறுதிவரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பதப்படுத்தப்படாத தேயிவைக் கொழுந்து வழங்குனர்களின் விலைப்பட்டியல்கள் மற்றும் பதப்படுத்தப்படாத தேயிலைக் கொழுந்து வியாபாரிகளின் கொடுப்பனவு ஆவணங்களில் காணப்பட்ட பொருத்தமின்மைகள் இனங்கண்டு கொள்ளப்பட்டதனால் அச்சிக்கலிருந்து விடுபடுவதற்காக தற்பொழுது பரிசீலினைகள் நடைபெறுவதுடன் அப்பரிசீலனைகள் முடிவடைந்ததன் பின்னர் உரிய பணத்தை கொழுந்து வியாபாரிகளுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2019 யூன் 30 ஆந் திகதியளவில் அனைத்து கொடுப்பனவுகளையும் பூர்த்தி செய்வதற்கும் அவ்வாறு செயற்படுத்துவதற்கு முடியாது போனால் அப்பணத்தை திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசீலனை நடவடிக்கைகளை விரைவுபடுத்தி மிகுதிப் பணத்தை திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்வேறு ஒப்பந்தங்களுக்காக ஒப்பந்த பெறுமதியில் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் ரூபா 3,014,243 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருந்தும், தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி வைப்புக்கள் சம்பந்தமாக உரிய தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரப்பினர்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களால் பச்சை தேயிலை வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 6,850,840 தொகை 01 ஆண்டிலிருந்து 16 ஆண்டுகள் வரை காணப்பட்டிருந்ததும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களில் 6 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வைப்புக்களின் அளவு ரூபா 3,206,392.85 ஆக இருந்ததுடன் அந்த வைப்புக்களுக்குரிய வழங்குனர்களின் விபரத்தை தேடிப்பார்ப்பதற்கு முடியாதிருந்தது. மிகுதி வைப்புக்களுக்காக உரிய வழங்குனர்களின் விபரம் தற்பொழுது தீர்த்து வைக்கப்பட்டு வருவதுடன் அதற்கு இணங்க கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலே குறிப்பிட்ட பணத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் யாராவது நபர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த முன்வந்தால் அப்பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச்சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செஸ் வரி அறவிடுதல் சபையின் மூலம் இடம்பெற வேண்டிய போதிலும் அதற்கு முரணாக | ஆரம்பத்தில் தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தேயிலைச் சபையினால் செஸ்வரி அறவிடுதல் இடம்பெற்றிருந்த போதிலும், பின்னர் அங்கீகரிக்கப்பட்ட | சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செஸ் வரி அறவிடுதலானது பொதுத்திறைசேரியினால் இடம்பெற்றிருந்தும், அதற்காக தேயிலைச் சபை அதிகாரச்சட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை | ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் மூலம் செஸ் வரி அறவிடுதல் பொதுத் திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவசியமான ஆலோசனைகள் சட்டமா அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | சபையினால் மனித வளங்கள் முகாமைத்துவத்திற்காக சட்டவிதிகளை தோற்றுவிப்பதற்கு தொடர்புபட்ட செயல் நடைமுறைக் கையேட்டினைத் தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை கையேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | உரிய செயல் நடைமுறைக் கையேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | செயல் நடைமுறைக் கையேட்டினை விரைவாகத் தயாரித்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 835(2)(இ) | மீளாய்வாண்டில் காலி பிராந்திய அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காக பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகைப் பெறுமதி ரூபா 93,500 ஆக இருந்தும் அப்பெறுமதியினை மிகைத்து ரூபா 115,000 வீதம் மாதாந்த வாடகைப் பெறுமதிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் | இலங்கை தேயிலைச் சபையின் காலி பிராந்திய அலுவலகம் செயற்படுத்தப்பட்டு வந்த கட்டிடம் 2017 யூன் மாதம் 30 ஆந் திகதி உரிமையாளருக்கு ஒப்படைக்கப் பட்டிருந்ததனால் அப்பிராந்திய அலுவலகம் கண்டிப்பாக 2017.07.01 ஆந் திகதி வேறு இடத்தில் தோற்றுவிப்பது அத்தியாவசதியமானதாக இருந்ததனால் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 93,500 இனை மிகைத்து வாடகைக்கு அதாவது மாதாந்தம் ரூபா 115,000 வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், | குத்தகை அடிப்படையில் கட்டிடத்தைப் பெற்றுக் கொள்ளும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அதற்காக இலங்கை தேயிலைச் சபையின் பெறுகைக்குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அந்த அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் பணிப்புரை | சபையின் எதிர்பார்த்த விபரக் குறிப்புக்களுக்கு இணக்கமின்றி இருந்ததன் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத, 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 32,132,088 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட கிருமிநாசினி இரசாயனக் கூறு பகுப்பாய்வு இயந்திரம் மற்றும் ரூபா 5,592,421 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட CP-3800 Gas Chromatorgraphy இயந்திரம் தற்பொழுது விளைவற்றுக் காணப்பட்டது. | 2018-09-25 ஆந் திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது 2018/480/288 ஆம் இலக்க பத்திரத்தின் கீழ் LCMS இயந்திரத்தினை பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கு ரூபா பத்து இலட்சத்தில் ஒரு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. LCMS இயந்திரத்தின் வழங்கல் முகவர் மற்றும் நிகழ்கால முகவர்களை அழைத்து உரிய உபகரணத்தைப் பழுதுபார்த்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் 2019-05-09 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது தெரியப்படுத்தியவாறு அந்த இயந்திரத்தை மீண்டும் செயற்படுத்துதல் சம்பந்தமாக சான்றிதழை வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை என தற்போதைய முகவர்களினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த இயந்திரத்தை மீண்டும் திருத்தம் செய்வதனை நிறுத்தி வைப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திந்தது. தற்பொழுது இணையத்தள சந்தையில் உருவாகியுள்ள கிருமிநாசினிகளைப் பரீட்சித்தல் வேலைத்திட்டத்தின் | பொருட்களைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் எதிர்பார்த்த நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தக்கூடிய தனை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காரணமாக இதற்கு முன்னர் கொள்வனவு செய்த LCMS இயந்திரத்தை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க தற்போதைய முகவர் பழைய LCMS இயந்திரத்தை அவர்கள் பெற்றுக்கொண்டு அதற்காக செலவிடப்பட்ட முழுப் பணத்தையும் புதிய LCMS-MS இயந்திரத்தை கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தில் கழித்துக் கொண்டு வழங்குவதற்கு இணங்குவதாகத் தெரிவித்துள்ளனர். புதிய பிரேரணை தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க இப்பிரேரணையை அமுல்படுத்தக்கூடிய முறைமையினை ஆராய்ந்து பார்த்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது ஊழல் அல்லது மோசடி குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவும் விசாரணைகளை நடாத்துவதுடன் அதன்மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 43,977,748 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 93,322,795 ஆகும். அதற்கிணங்க, நிதி விளைவுகளில் ரூபா 49,345,047 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானம் 19.47 சதவீதத்தால் குறைவடைதல் மற்றும் நிருவாகச் செலவுகள் 8.9 சதவீதத்தால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வுகள்**

மீளாய்வாண்டில் பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| விடயம் | 2018 | 2017 | முரண் சாதகம் / (பாதகம்) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| வருமானம் | | | |
| அரசாங்க மானியம் | | | |
| - மீண்டு வருபவை | 165,800,000 | 153,500,000 | 8.00 |
| - மூலதனம் | 50,000,000 | 17,500,000 | 185.71 |
| பதிவு செய்தல் கட்டணம் | 179,634,806 | 183,316,794 | (3.65) |
| பிரசித்தப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் நிதியிலிருந்து மாற்றுதல் | 12,441,000 | 43,500,000 | (72.65) |
| நிதி வருமானம் | 103,020,269 | 109,265,725 | (5.72) |
| செலவுகள் | | | |
| அபிவிருத்தி செலவுகள் | 56,439,112 | 18,780,613 | (200.52) |
| நிருவாகச் செலவுகள் | 382,786,592 | 351,504,928 | (8.90) |
| நிதி செலவுகள் | 57,486,825 | 80,863,240 | 28.91 |

மீளாய்வாண்டில் பிரசித்தப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் நிதியிலிருந்து சபையின் வருமானத்திற்கு மாற்றப்பட்ட பணம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 72.65 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், அதற்காகப் பின்பற்றப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பழுதுபார்த்தல் மற்றும் மேற்பார்வை செலவுகள் 28.61 சதவீதத்தால் அதிகரித்தல் பிரதானமாக நிருவாகச் செலவுகள் அதிகரிப்பதற்கு தாக்கமளித்திருந்தது.

**2.3 சதவீதப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நடைமுறை விகிதம் முறையே 7.62 மற்றும் 10.25 என்ற உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. பிரச்சித்தப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் நிதியின் குறுங்கால முதலீடு மற்றும் நிலையான வைப்புக்கள் மொத்த நடைமுறைச் சொத்துக்களில் 76 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியமையானது அதற்கு தாக்கமளித்திருந்தது. முன்னைய ஆண்டில் 13.44 சதவீதமான செயற்பாட்டு மிகையானது மீளாய்வாண்டில் நிருவாகச் செலவுகள் அதிகரித்தல் மற்றும் வருமானம் குறைவடைதலுடன் 1.58 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சாத்திய வள ஆய்வின்றி ஆரம்பிக்கப்பட்ட ‘‘டீ மோமன்ட்ஸ்’’ இனை ஆக்கபூர்வமாக அமுல்படுத்துவதற்கு முடியாமையின் அடிப்படையில் ரூபா 62,603,006 நட்டம் ஏற்பட்டமை சம்பந்தமாக பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய கடிதம் மூலம் கவனயீனமாகச் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PI/3/2/1/SLTB-72 ஆம் இலக்க 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய கடிதம் 2017/461/23 ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் கீழ் அப்போது இருந்த பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் சபையினால் தெளிவான தீர்மானம் வழங்கப்படாததன் காரணமாக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. | தற்போதைய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 124,037,913 செலவு செய்து இரண்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் அக்காணிகள் இரண்டினதும் உரிமையை சபைக்கு சட்டரீதியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய இரண்டு காணிகளிலும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக அப்பிரதேச செயலாளர்களால் தேயிலைச் சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்ததுடன் அக்காணிகளுக்கான வருடாந்த உத்தரவுப் பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டு வருகின்றது. | விரைவாக காணியின் உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டில் காணப்பட்ட அதிக மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ள நிலைமையால் சேதத்திற்கு உள்ளாகிய தொழிற்சாலைகளுக்கு நிவாரணக் கொடுப்பனவு செய்யும் போது ஒரு தொழிற்சாலையால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த அறிக்கையில் (ரீசீ5) காட்டப்பட்ட சேதமடைந்த இருப்புக்களின் அளவை விட அதிகளவான இருப்புக்களுக்கு கொடுப்பனவு செய்ததன் காரணமாக அதற்காக ரூபா 714,455 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிர்ணயிக்கப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வியாபாரக் குறியை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக சபையினால் மீளாய்வாண்டில் 18 ஏற்றுமதியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அதற்காக ரூபா 400,238,711 செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் 04 ஏற்றுமதியாளர்களுடன் மாத்திரம் உடன்படிக்கை செய்தல் இடம்பெற்றிருந்தமை மற்றும் தேயிலை மேம்பாட்டு நிதியின் உழைப்புக்களிலிருந்து ரூபா 8 பில்லியன் ஈடுபடுத்தி அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பு மற்றும் உருவாக்குதல் | உலகலாவிய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் இன்று வரை ஆரம்பிக்கப்படாததுடன் அதற்காக தேவையான உருவாக்கத்திற்கான ஆரம்பச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே மேம்பாட்டுச் செலவுகளுக்கு மேலே குறிப்பிட்ட ஆக்கங்களுக்குச் செலவு செய்யப்பட்ட பணத்தை சேர்த்துக் கொள்கையில் மேம்பாட்டுச் செலவுகள் அதிகரித்துள்ளது. 2018/2019 வியாபாரக்குறி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் 2018 செப்தெம்பர் 02 ஆந் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டு பத்திரிகை அறிவித்தல் பிரசிப்படுத்தப்பட்டது. | மேம்பாட்டு நடவடிக்கைகளை காலத்திற்குப் பொருத்தமானதாக மிகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| நடவடிக்கைகளுக்காக ஒரு தனியார் கம்பனியைத் தெரிவு செய்து வணிக விளம்பரங்களை உருவாக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 199,674,721 செலவு செய்யப்பட்டிருந்தும் ஊடக நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமையின் காரணமாக எதிர்பார்த்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் மேம்பாட்டுச் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18.87 சதவீதத்தினால் மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டிருந்தும் தேயிலையின் ஏற்றுமதி அளவு 2.21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | அதற்கிணங்க 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி 20 விண்ணப்பதார்களின் விண்ணப்பங்கள் இலங்கை தேயிலைச் சபையினால் 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.<br><br>அதற்கிணங்க 18 விண்ணப்பதாரர்கள் 2018/2019 ஆண்டிற்காக நலன்களைப் பெறும் தகைமைகளைப் பெற்றிருந்தார்கள். அதற்காக இலங்கை தேயிலைச் சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி கிடைத்துள்ளதுடன் தற்பொழுது உரிய திட்டங்களை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களின் திட்டங்கள் தற்பொழுது தேயிலைச் சபைக்கு கிடைத்து வருகின்றதுடன் அடுத்துவரும் மாதங்களுக்குள் அந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

## 3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேயிலைச் சந்தைப்படுத்தல் நிலையத்திற்காக 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,899,510 பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் கணனிகள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | குறிப்பிடப்பட்ட தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் மற்றும் பொருத்திகளினதும் ஒரு பகுதி தற்பொழுது இலங்கை தேயிலைச் சபையின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதியான பொருட்கள் பத்திரிகை அறிவித்தலின் மூலம் விலைமனுக்கள் கோரப்பட்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், மதிப்பீட்டு விலையினை விடக் குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில பொருட்களை கைதவிர்ப்புச் செய்வதற்காக தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பெருந்தோட்ட | சபைக்கு பாதகமான நிலைமையைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கைத்தொழில்கள் அமைச்சு செயலாளரினால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளின் பிரகாரம் எதிர்காலத்தில் அச்சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**3.6 செயற்திட்ட அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 260,200,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைக்கு தகவல் தொழில்நுட்ப முறைமையத் தயாரிப்பதற்கான ஆலோசனை சேவைகளுக்காக ரூபா 885,000 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுகைகளை முடிவுறுத்தும் வகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சினைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை தற்பொழுது பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் அடுத்துவரும் 2 மாதங்களின் போது இப்பெறுகைகளைப் பூர்த்தி செய்யலாம். | பெறுகை நடைவடிக்கைகளைத் திட்டமிட்டவாறு உரிய காலத்தில் நிறைவேற்றுதல் வேண்டும். |